Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 110 · வெள்ளிக்கிழமை Friday · 20.02.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

## தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு

# திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது

## திராவிட மாடல் ஆட்சி தொடர, இணைந்து பயணிப்போம் - முதலமைச்சர் ஸ்டாலின்

## சட்டசபை தேர்தலில் போட்டியிடுவேன்-பிரேமலதா பேட்டி



சென்னை: தமிழக சட்டப் பேரவை தேர்தலை முன்னிட்டு திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்துள்ளது. இன்று அண்ணா அறிவாலயத்துக்கு வந்த தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஆகியோர் முன்னிலையில் திமுக கூட்டணியில் இணைந்தார்.

தமிழக சட்டப் பேரவை தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், கூட்டணிக் கணக்குகளும், பிரச்சார வியூகங்களும் அனல் பறந்து வருகின்றன. மேலும், இந்த தேர்தலில் நடிகர் விஜய்யின் தவெகவும் களமிறங்குவதால், முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான போட்டி நிலவி வருகிறது.

இதனால் ப லமான கூட்டணியை அமைக்கும் கட்சியே, ஆட்சிக் கட்டிலை கைப்பற்றும் என்கிற சூழல் உருவாகியுள்ளது. இதனால் திமுகவும், அதிமுகவும் பிற கட்சிகளை இணைத்து தங்கள் கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஆட்டம்காட்டிய தேமுதிக திமுகவை பொறுத்தவரை, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மதிமுக, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளை உள்ளடக்கிய பலம் வாய்ந்த கூட்டணியை தக்க வைத்து வருகிறது.

மறுபுறம், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக, பாமக (அன்புமணி அணி), த.மா.கா, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஆனால், வட மாவட்டங்களில் கணிசமான வாக்கு வங்கியை வைத்திருக்கும் தேமுதிக, எந்தக் கூட்டணியிலும் சேராமல் இருந்து வந்தது. இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை கேட்டதாலும், மாநிலங்க ளவை சீட்டு கோரியதாலும் திமுகவும் சரி, அதிமுகவும் சரி, இதுகுறித்து சட்டென முடிவெடுக்க முடியாமல் திணறி வந்தாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, அதிமுக-பாஜககூட்டணியில் தேமுதிக இணையப் போவதாக கடந்த இரண்டு நாட்களாகவே தகவல்கள் பரவி வந்தன. இதனால் அதிமுக கூட்டணி பலம் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட சூழலில், திடீர் ட்விஸ்ட்டாக இன்று திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது.

அண்ணா அறிவாலயத்துக்கு தனது தம்பி சுதீஷுடன் வருகை தந்த பிரேமலதா விஜயகாந்த், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை சந்தித்து பேசினார். பின்னர் அவர்களின் முன்னிலையில், திமுக கூட்டணியில் அவர் இணைந்தார். இந்த சந்திப்பின் போது அமைச்சர்கள் கே.என். நேரு, சேகர்பாபு, எம்.பி. கனிமொழி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தேமுதிகவை பொறுத்தவரை, அது தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே வட மாவட்டங்களில் மிகப் பெரிய செல்வாக்கை வைத்திருந்தது. தேமுதிக வருகைக்கு பிறகு, வட மாவட்டங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த பாமகவின் பலம் பாதியாக குறைந்தது என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு தேமுதிகவின் வீச்சு அங்கு இருந்தது. திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்திருப்பதால், வட மாவட்டங்களில் இருந்து கணிசமான வாக்குகள் அக்கூட்டணிக்கு கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. இப்போதைய சூழலில், பாமகவும் இரண்டாக பிளவுபட்டிருப்பதால், வன்னிய சமூகத்தினரின் பெரும்பாலான வாக்குகள் திமுக கூட்டணிக்கு கிடைக்கும் என அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பின்னர் கோயம்பேடு தேமுதிக அலுவலகத்தில், செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா, தொண்டர்களின் விருப்பத்துடன் தான் திமுகவுடன் கூட்டணி அமைத்திருக்கிறோம். இக்கூட்டணி 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் என கூறியுள்ளார்.

இந்த முறை திமுகவோடு கூட்டணி வைக்க வேண்டும் என எங்களுடைய நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் வலியுறுத்தினார்கள். அவர்களின் விருப்பப்படி கூட்டணி அமைத்துள்ளோம்.

கேப்டன் இல்லாத நேரத்தில் இந்தகூட்டணி அமைந்திருக்கிறது. இது 2016ம் ஆண்டே இது அமைந்திருக்க வேண்டிய கூட்டணி. அப்போதே கலைஞர் பழம் நழுவி பாலில் விழும் என்றார். அது 10 வருடம் கழித்து நடந்திருக்கிறது என கூறியவர், 234 தொகுதிகளும் தே.மு.தி.க.வின் களம்தான் என்றார்.

தமிழ்நாடு அரசியல் களத்தில் உள்ள அனைவரும் தோழமை கட்சிகள் தான் என்றவர், பலரின் கற்பனைகளுக்கும் தே.மு.தி.க. இன்று முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்றவர், வரவிருக்கிற சட்டசபை தேர்தலில் நானும் போட்டியிடுவேன் என்றவர், இக்கூட்டணி 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் என கூறியுள்ளார்.

# இனி ஆண்டுதோறும் கோடைக்கால சிறப்புத்தொகை ரூ.2000 வழங்கப்படும்



கோடைக்கால சிறப்பு நிதியாக இனி ஒவ்வொரு ஆண்டும் ரூ.2000 வழங்கப்படும் என அமைச்சர் கீதாஜீவன் சட்டப்பேரவையில் அறிவித்திருக்கிறார். கடந்த சில நாட்களுக்கு முன்னர்தான் கோடைக்கால சிறப்பு நிதி அறிவிப்பு வெளியானது. அப்போதே ஆண்டு தோறும் இது நீட்டிக்கப்படும் என அறிவித்திருக்கலாம். இருப்பினும் இன்று தமிழக அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டது ஏன்? இதற்கு பின்னால் முக்கிய காரணம் இருப்பதாக சொல்லப்படுகிறது. இலவசங்களை தடுத்து நிறுத்த வேண்டும், குறிப்பாக தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்படும் இலவசங்கள் மற்றும் பண உதவி தொகைகள் போன்றவற்றை நிறுத்த வேண்டும் என்று பாஜக ஆதரவு வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார். இந்த வழக்கு மார்ச் மாதம் விசாரணைக்கு வருகிறது. விசாரணையில் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்களையும் நிறுத்த உத்தரவு வர வாய்ப்பு இருப்பதாக சொல்லப்பட்டு வந்தது.

ஆனால், மார்ச் மாதம் வரை காத்திருக்காமல், பணம் வழங்கும் திட்டங்கள் குறித்த கருத்தக்களை உச்சநீதிமன்றம் தற்போதே வெளியிட தொடங்கியுள்ளது. அதாவது மத்திய அரசின், 2024 மின்சார சட்டத் திருத்த விதிகளின் 23வது விதியை எதிர்த்து, தமிழ்நாடு மின் விநியோக நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, இன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யா காந்த் தலைமையிலான நீதிபதிகள் ஜோய்மால்யா பக்ஷி மற்றும் விபுல் பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. இலவசங்கள் குறித்து விமர்சனம் விசாரணையில், "கடைசியா தேர்தல்கள் நடந்த இடங்களில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். தேர்தல் வரும்போது ஏன் திடீரென திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன? இலவசங்களை கொடுத்தால், அதை தொடர்ந்து செய்தால், நாட்டின் வளர்ச்சி தடுக்கப்படும்.

மாநிலங்கள் பற்றாக்குறையில் இயங்கிக்கொண்டிருந்தாலும், மக்களுக்கு பணத்தை விநியோகித்து வருவது கவலையளிக்கிறது. அந்தப் பணம் எங்கிருந்து வருகிறது? அது வளர்ச்சி நோக்கங்களுக்காக ஏன் பயன்படுத்தப்படக் கூடாது? சாலைகள், நீர்ப்பாசனம், மின்சாரம் என நீங்கள் விரும்பும் எதற்கும் நீண்டகாலத் திட்டம் வைத்திருக்கலாம். வங்கிக் கணக்கில் பணம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் சம்பாதித்து கண்ணியத்தையும் சுயமரியாதையையும் தக்க வைத்துக் கொள்ள முடியும். காலையிலிருந்து இலவச உணவு, இலவச எரிவாயு, இலவச மின்சாரம் வழங்க ஆரம்பித்தால்... நீங்கள் நேரடியாக வங்கிக் கணக்கில் பணத்தைப் பரிமாற்றம் செய்கிறீர்கள். அப்படியானால் மக்கள் ஏன் வேலை செய்ய வேண்டும்? ஒரு தளத்திலிருந்து அனைத்தையும் பெற முடியும் என்று தெரிந்தால், அவர்கள் எங்கிருந்து வேலை கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?" என கேள்வி எழுப்பியிருந்தது.

மகளிர் உரிமைத் தொகை போன்ற பணம் வழங்கும் திட்டங்களை குறித்துதான் நீதிமன்றம் இப்படியான கேள்விகளை எழுப்பியிருக்கிறது. ஆனால், மறுபுறம் மகளிர் உரிமைத்தொகை பெண்களுக்கான சமூக முன்னேற்றத்தில் ஆக்கப்பூர்வமாக பங்களித்திருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது. கிராமப்புறங்களில் இன்றும் தினசரி ரூ.250க்கு கூட வருமானம் கிடைக்காமல் பெண்கள் இருக்கின்றனர். குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப, கட்டணம் செலுத்த, கல்விக்கு தேவையானவற்றை வாங்க, வீட்டு வாடகை, உணவு தேவை என இவற்றை சமாளிக்க ஏதோ ஒரு வகையில் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை பயன்படுகிறது. மட்டுமல்லாது இந்த திட்டம் எல்லோருக்குமானது கிடையாது. சமானிய மக்களுக்கானதுதான்.

இது குறித்து முன்னரே முதலமைச்சர் தெளிவாக கூறியிருந்தார். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தடுக்க விடமாட்டேன் என்று கூறியிருந்தார். இப்படி இருக்கையில் தான் உச்சநீதிமன்றம் இலவசங்கள் குறித்து பேசியிருந்த இன்றைய தினம், தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ.2000 வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது

# கூட்டணி அமைப்பது அந்தந்த கட்சி தலைவர்களின் விருப்பம்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேட்டி



சென்னை,

தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில், தி.மு.க. கூட்டணியா, அ.தி.மு.க. கூட்டணியா என்று மதில்மேல் பூனையாக இருந்த தே.மு.தி.க., கடைசியில் (வியாழக்கிழமை) தி.மு.க. கூட்டணியை உறுதி செய்துள்ளது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்துக்கு வந்த தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், முதல்-அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினை சந்தித்து தனது ஆதரவினை தெரிவித்தார்.

சமீபத்தில் கோவை ஈஷா யோகா மையத்தில் நடந்த சிவராத்திரி விழாவில் மத்திய மந்திரி ராஜ்நாத் சிங், மத்திய இணை மந்திரி எல்.முருகன், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். இந்த விழாவில், தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதாவும் கலந்து கொண்டார். இதனால் தேசிய ஜனநாயக கூட்டணியில் தே.மு.தி.க. இணைவது குறித்து பேசப்பட்டதா? என யூகங்கள் எழுந்த நிலையில், இன்று தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்துள்ளது. இது குறித்து பிரேமலதா விஜயகாந்த் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், "இது வெறும் அரசியல் முடிவு அல்ல. மக்களின் நம்பிக்கையை காக்கும் என் உறுதி. கேப்டன் விஜயகாந்த் ஆசீர்வாதத்துடன், மக்களின் ஆதரவுடன், நிச்சயம் நாம் வெல்வோம்" என்று பதிவிட்டுள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள எடப்பாடி பழனிசாமி," என்ன தான் ஆச்சு இந்த முதல்வருக்கு? ஆட்சிக்கு வந்து எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் நிறைவேற்றவில்லை, திறந்ததெல்லாம் அதிமுக திட்டங்கள் மீதான ஸ்டிக்கர்கள் மட்டுமே! போதாது என்று, தேர்தல் நெருங்குவதும் ஸ்டிக்கர் பித்து அதிகரித்ததோ என்னவோ, அஇஅதிமுக-வின் வரலாற்றுச் சாதனைகள் மீது ஏறி சவாரி செய்ய ஆசைப்படுகிறார் திரு. முக ஸ்டாலின். ஏற்கனவே 7.5% திட்டம் குறித்து ஒரு வரலாற்றுப் பொய்யை நாக் கூசாமல் மருத்துவத்துறை அமைச்சர் வாயிலாக பேசியதை, நேற்று சட்டமன்றத்திலேயே தோலுரித்தேன்.

இதனிடையே தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்ததற்கு ம.தி.மு.க., காங்கிரஸ். வி.சி.க. உள்ளிட்ட கட்சிகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. இந்த நிலையில், சட்டமன்ற வளாகத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர், "கூட்டணி அமைப்பது அந்தந்த கட்சி தலைவர்களின் விருப்பம்" என்று தெரிவித்தார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**



Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மதுராந்தகம் அருகே பாக்கம் ஊராட்சியில் பா.ஜ.க. சார்பில் தெருமுனைக்கூட்டம்




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள பாக்கம் ஊராட்சியில் ஒன்றிய பொதுச் செயலாளர் ராஜா மலர் ஏற்பாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் நாளை நமதே தமிழ்நாடு நமதே. பாக்கம் சக்தி கேந்திரம் சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பாஜக ஒன்றிய. மோகன்குமார் தலைவர் தலைமையில் நடைபெற்றது எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக அரசின் மக்கள் விரோதப் போக்கை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி யார் அவர்களை ஆட்சி கட்டிலில் அமர வைக்க அயராது பாடுபடுவோம் என்று உருது மொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளர் மதூர் முருகன். மாநில செயலாளர் தினகரன் (NGO பிரிவு), மாவட்ட சிறுபான்மை பிரிவு தலேவர் குமார், முன்னாள் மாவட்ட பட்டியலின தலைவர். ரவிச்சந்திரன், ஒன்றிய பொதுச் செயலாளர் சுரேஷ், ஓ பி சி அணி மாவட்ட துணை தலைவர் பாபு, ஒன்றிய துணைதலைவர் கோகுல கிருஷ்ண தாஸ், மாநில மகளிர் அணி செயற்குழு உறுப்பினர் கலைச்செல்வி, அமைப்புசாரா அணி மாவட்ட செயலாளர் ரகு, அதிமுக ஒன்றிய கவுன்சிலர் மாசி, மாநில பொதுக்குழு உறுப்பினர் கிருபாநிதி மற்றும் புரட்சி பாரதம் மாவட்ட செயலாளர் அதே சேகர், உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



தமிழ் தாத்தா உ .வே. சாமிநாத ஐயரின் 171 ஆம் ஆண்டு பிறந்த நாள் நிகழ்ச்சி ஓலைச்சுவடியில் இருந்த தமிழ் இலக்கியங்களை நம் கைகளில் புத்தகமாக அச்சேற்றி கொடுத்தவர் அவரது புகழ் ஓங்குக.




சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G. தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி "அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலை பள்ளியில் மாணவர் கடந்த 7 ஆம் வகுப்பு முதல் தற்பொழுது 10 ஆம் வகுப்பில் தொடர்ந்து பள்ளி" இல் படிப்பில் முதலிடம் பெற்று வருவதை அறிந்து அந்த மாணவனை ஊக்குவிக்கும் விதமாக "பன்முக திறமையாளர்" (Multi Talent award) விருதுக்கான சான்றிதழை T.கலாநிதிக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

# மதுராந்தகத்தில் பாஜக பட்டியல்அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## மாவட்டத்தலைவர் டாக்டர் பிரவீன்குமார் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தேரடி தெருவில் பாரதிய ஜனதா கட்சி செங்கல்பட்டு மாவட்டம் பட்டியல் அணி சார்பாக திமுக அரசைகண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தற்போதைய அரசான திமுக அரசு பட்டியல் சமூக பழங்குடியினர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் திட்டங்களை திசை திருப்பி அனுப்பியதாகவும், பட்டியல் சமூக மக்களை கருத்தில் கொள்ளவில்லை என்றும் திமுக அரசை கண்டித்து மதுராந்தகத்தில் பட்டியல் அணி மாவட்ட தலைவர் தாமோதரன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில பட்டியல் அணி தலைவர் சம்பத்ராஜ், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் தினகரன், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் ரகுராமன், தெற்கு மாவட்ட தலைவர் டாக்டர் பிரவீன் குமார், முன்னாள் மாவட்ட தலைவர் பலராமன் முன்னாள் பட்டியல் அணி தலைவர் ர வி ச் ச ந் தி ர ன் , தி ரு நா வு க் க ர சு ,புரட்சி பாரதம் கட்சியின் மாநில செயலாளர் அதே சேகர், அதிமுக நகரத் தலைவர் சரவணன் ,பாமக மாநில செயலாளர் பொன் கங்காதரன், பாஜக மாவட்ட செயலாளர் மதூர் முருகன் பொதுச் செயலாளர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் திமுக அரசை கண்டித்து கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு கண்டன கோஷங்களை எழுப்பி தங்கள் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.



# நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மறுமலர்ச்சி திமுக 234 தொகுதியிலும் போட்டியிடும்

## உளுந்தூர்பேட்டையில் செய்தியாளர் கேள்விக்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பதில்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் விழுப்புரம் மண்டல மறுமலர்ச்சி திமுகவின் சார்பில் தேர்தல் நிதி அளிப்பு மற்றும் கட்சி வளர்ச்சி நிதி அளிப்பு கூட்டம் நடைபெற்றது கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் ஜெய்சங்கர் தலைமை நடைபெற்ற கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டு கள்ளக்குறிச்சி விழுப்புரம் கடலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மதிமுக நிர்வாகிகள் மற்றும் புதுச்சேரி மாநில மதிமுக நிர்வாகிகள் வழங்கிய தேர்தல் மற்றும் கட்சி வளர்ச்சி நிதியை பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேட்டி அளித்த வைகோவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர் அப்பொழுது கடந்த ஓராண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டம் மைக்கல்பட்டியில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் படித்த மாணவி மதம் மாற்றம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக எழுந்த சம்பவத்தைத் தொடர்ந்து அவர் மதம் மாற்றம் செய்யப்படவில்லை என சிபிஐ உச்ச நீதிமன்றம் இன்று அறிக்கைதாக்கல் செய்தது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர் அந்த சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் அதனை முழுமையாக விசாரித்து யாரேனும் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது தமிழ்நாடு அரசு மற்றும் காவல் துறையின் பொறுப்பு என்று கூறினர். தொடர்ந்து நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திமுக எத்தனை தொகுதிகளில் போட்டியிடும் என்ற செய்தியாளரின் கேள்விக்கு பதில் அளித்தஅவர் 234 தொகுதிகளில் என்று பதில் கூறினார்.






தேனி மாவட்டம் பெரியகுளம் வடுகபட்டி அருகே மேல் மங்கலத்தில் பாரதிய ஜனதா கட்சியின் தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் நாளை நமதே !தமிழ்நாடும் நமதே !என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது தேனி மாவட்ட தலைவர் பி. இராஜபாண்டி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். சக்தி கேந்திரம் பொறுப்பாளர் முத்துப்பாண்டி மற்றும் மண்டல் தலைவர் முத்தையா, தேனி மாவட்ட இளைஞரணி பொதுச் செயலாளர் முனியாண்டி, பெரியகுளம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி k.பாலா, மற்றும் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# ஓமலூர் காவல்நிலையம் முன்பு வழக்கறிஞர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்




சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள கருப்பண்ணம்பட்டி வழக்கறிஞர் தசரதன் அவர்கள் மீது ஓமலூர் காவல்துறையினரால் 14.02.2026 சனிக்கிழமை அன்று பொய்வழக்கு பதிவு செய்ததை கண்டித்து ஓமலூர் வழக்கறிஞர் சங்கம் சார்பில் ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்க தலைவர் P.S.சுந்தரராஜன் தலைமையில் ஓமலூர் காவல் நிலையம் முன்பு கண்டன் ஆர்ப்பாட்டம் 18.02.26 புதன்கிழமை நடைபெற்றது.ஓமலூர் அருகே கருப்பனம்பட்டியில் காதல் திருமணம் செய்ததால் 2 குடும்பங்களுக்கு இடையே கடும் மோதல் ஏற்பட்டது.மனோஜ் என்பவர் அதேபகுதியை சேர்ந்த இளந்தென்றல் என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார் இதற்கு இரு குடும்பத்தாரும் இடையே எதிர்ப்பு ஏற்பட்டு கைகலப்பாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அளித்த புகாரின் பெயரில் மாப்பிள்ளை மனோஜ், அவரது அண்ணன் மணிகண்டன், வழக்கறிஞர் தசரதன் உள்ளிட்ட 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர். வழக்கிற்கு சம்பந்தமில்லாத வழக்கறிஞர் தசரதனை ஏன் கைது செய்தீர்கள் என்று கைது செய்த நாளிலிருந்து வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனை தொடர்ந்து ஓமலூர் காவல் நிலையம் முன்பு ஓமலூர் வழக்கறிஞர் சங்கம் சார்பில் ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்கத் தலைவர் P.S.சுந்தரராஜன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் ஞானசேகரன், மகாலிங்கம், K. திருமுகம், K.S.விவேகானந்தன், S.ஜீவிதா, சிவம், செல்லதுரை, பிரபு, செந்தில், சாமிநாதன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர் பாலசுந்தரம் புதிய நிர்வாகிகள் அறிவிப்பு



தேவேந்திர பேனாக்கள் இயக்கம்,தமிழ்நாடு மற்றும் மராட்டிய மாநிலத்திலும் அனைத்து சமுதாயமும், அனைத்திலும் சமநிலையில் வாழ்வதற்காகவும்,வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கும்,வளமான நாட்டை வளர்த்தெடுத்தெடுப்பதற்கும் அறிவாயுதம் ஏந்தி வழக்கறிஞர்,உறவாடி உயர் T.C.பாலசுந்தரம் தலைமையில் மக்கள் பணி செய்து வருகிறது.

தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர் பாலசுந்தரம் 12-2-26 அன்று இயக்கத்தின் புதிய நிர்வாகிகளை அறிவித்தார்.அதன்படி இயக்கத்தின் திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஜெயப்பிரகாஷ் இயக்க அறிவாயுத கொள்கைக்கு முரண்பாடாக நடந்ததால் அவரை நீக்கிவிட்டு அவருக்கு பதிலாக சேவனக்கரையான்பட்டியைச் சேர்ந்த திரு.K.சரன்ராஜ் B.Sc.,அவர்களை புதிய மாவட்ட செயலாளராக நியமனம் செய்து அறிவித்தார்.

மேலும் இயக்கத்தின் புதிய நிர்வாகிகளாக தென்காசி மாவட்ட மகளிரணி செயலாளராக பாப்பாங்குளம் மலையாங்குளம் வழக்கறிஞர் R. மாரியம்மாள் அவர்களையும்,திண்டுக்கல் மாவட்ட தலைவராக தொட்டணம் பட்டி கி.சேது அவர்களையும்,தேனி மாவட்டம் பெரியகுளம் ஒன்றிய துணைத்தலைவராக பெருமாள்கோயில்பட்டி சி.மகேந்திரன் அவர்களையும்,தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றிய துணைத்தலைவராக பாப்பாங்குளம் புதுக்காலனியைச்சேர்ந்த S. ஆறுமுககாந்தி அவர்களையும்,தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றிய தலைவராக பிள்ளையார் கோயில் பட்டி S.முருகேசன் அவர்களையும்,தேனி மாவட்டம்ஆண்டிபட்டி ஒன்றியதலைவராகஅமைச்சியாபுரம் T.விக்னேஸ்வரன் அவர்களையும்,தென்காசி மாவட்டம்,கடையம் ஒன்றிய இளைஞரணி துணைச் செயலாளராக பெரிய தெரு M.சக்திகுமார் ஆகியோர்களுக்குபொறுப்புகள் வழங்கிஅறிவித்தார்.

மேலும் பொறுப்புகள் வழங்கி அறிவித்த இயக்க நிர்வாகிகளுக்கு நமது இயக்க மூலக்கொள்கையான அறிவும் ஆற்றலும் இரண்டு கண்கள் என்ற கொள்கையை மனதில் பதித்து அறிவாயுதம் ஏந்தி தேவேந்திரகுல வேளாளர்கள் சமுதாயம் பொருளாதாரம்,அரசியல் ,கல்வி,வேலைவாய்ப்பு, சமூக நீதியில் வளர்ச்சியடைய பாடுபடவேண்டும் என்றும் ,புதிய நிர்வாகிகள் அனைவரும் உளமாறவும்,உளப்பூர்வத்தோடும் இயக்கப்பணி செய்ய வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன் என்று வாழ்த்துக்களை தெரிவித்தார்.இந்நிகழ்வில் தேவேந்திர பேனாக்கள் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



சேலம் மாவட்டம் தாரமங்கலம் தங்க சாலை வீதியில் வசித்து வரும் கிருஷ்ணன் அவர்களின் மகன் சசிகுமார் அவர்கள் பொது மக்களின் நலனுக்காக சமூக ஆர்வலராக பணி செய்து வந்தார். சசிகுமார் அவர்களுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கமிட்டி சார்பாக புதிய 23 வது வார்டு நகர செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து புதிய 23 வது வார்டு பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர் கே சசிகுமார் அவர்களின் பணி மென்மேலும் தொடர கி.சசிகுமார் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# போக்குவரத்துக்கழக ஓய்வூதியர்களுக்கான பலன்கள் வழங்க ரூ.2,446 கோடிநிதி



சென்னை: போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்களுக்கான பலன்கள் வழங்க ரூ.2,446 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு உள்ளது.அரசுப் போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்களுக்கான பலன்களை வழங்க சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்து ஓய்வூதியதாரர்களுக்கான பலன்களை வழங்க ரூ.2,446 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 2024 ஏப்ரல் முதல் 2026 மார்ச் வரை ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற 6,867 பயனாளிகள் பயன் அடையும் வகையில், இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, விடுப்பு ஒப்படைப்பு தொகை, ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



# சட்டமன்றத்தேர்தலை முன்னிட்டு
## தூத்துக்குடி மாவட்ட எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு
### மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதன் நேரில் ஆய்வு

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் நடைபெற்று வரும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

சட்டமன்றத் தேர்தலை ஒட்டி, தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த எஸ்பி உத்தரவிட்டிருந்தார். அதன்படி மாவட்டத்தின் பிறமாவட்ட எல்லைகளில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் வாகனத் தணிக்கை நடைபெற்று வருகிறது.

சோதனையின் போது வாகனங்களின் விவரங்கள் முறையாகப் பதிவேட்டில் குறிக்கப்படுகின்றன.

சோதனைச் சாவடிகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மூலம் மாவட்டத்திற்குள் நுழையும் மற்றும் வெளியேறும் அனைத்து வாகனங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்த நிலையில் நேற்று செய்துங்கநல்லூர் சோதனைச் சாவடியில் நடைபெற்று வரும் கண்காணிப்புப் பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்கு பணியில் இருந்த காவலர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கினார். ஆய்வின் போது, ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி நிரேஷ், செய்துங்கநல்லூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஜுன்குமார் மற்றும் காவலர்கள் உடனிருந்தனர்.

# பர்கூர் சிப்காட் நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான தடகள போட்டி

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சிப்காட் பகுதியில் செயல்பட்டு வரும்



செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஃபேர்வே எண்டர்பிரைசஸ் (யூனிட் 1&2) ஆகிய நிறுவனங்கள் இணைந்து 2026 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டி ஊத்தங்கரை உள்விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடத்தினர். இதில் 45 பள்ளிகளில் இருந்து சுமார் 800 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட இந்த போட்டிகள் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்றன. 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல் (லாங் ஜம்ப்), ஷாட் புட் உள்ளிட்ட பல்வேறு தடகள போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ப பதக்கங்கள், சான்றிதழ் மற்றும் பிளாஸ்க் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆட்சியர் ச .திதேனஷ்குமார், மாவட்ட டி.எஸ்.ஓ நடராஜன், முருகன் மற்றும் மாவட்ட டி.ஐ.பி.இ. வளர்மதி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்.

நிறுவனத்தின் சார்பில் மூத்த தலைமை இயக்குநர் (நிர்வாகம்) மணிமாறன் அருணாச்சலம், நிர்வாக பொது மேலாளர் ஜெயராஜ் பாபு, பொது மேலாளர் அருள் மகாவிஷ்ணு மற்றும் வெளிநாட்டு தொடர்புகள் தலைவர் டேவிட் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியை Grace Academy of Sports நிறுவனத்தின் நிறுவனர் கோபிநாத் ஒருங்கிணைத்தார்.

மேலும், 2025–2026 ஆம் ஆண்டில் மைதான கேலரி மற்றும் கூடைப்பந்து மைதானம் ரூ. 23.8 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2026–2027 ஆம் ஆண்டிற்கான கைப்பந்து மைதான வேலி அமைத்தல், குழந்தைகள் விளையாட்டு பகுதி மற்றும் பிற புதுப்பிப்பு பணிகள் ரூ. 50 லட்சம் மதிப்பில் நடைபெற்று வருகின்றன. இந்த அனைத்து பணிகளும் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு (CSR) நிதியிலிருந்து மொத்தம் ரூ. 75 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகவல் Grace United FC Football Coaching Center சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

### ஈரோடு மாநகராட்சி அலுவலகம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள
# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கும் அறைகளை கலெக்டர் ச.கந்தசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி அலுவலகம் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (19.2.2026) ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சட்டமன்ற தேர்தல்-2026 தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படும் பாதுகாப்பாக வைக்கும் அறைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நேற்றைய தினம், வருகின்ற சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படும் பாதுகாப்பு அறைகளை ஈரோடு மாநகராட்சி அலுவலகம் மற்றும் ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அறையில் உள்ள பழுதடைந்துள்ள மின் விளக்குகளை சரிசெய்திடவும், மழையில் பாதிக்காதவாறு கதவுகளை சீரமைத்திட வேண்டும். தடையில்லா மின்சாரம் வழங்கும் வகையில் சரிசெய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். கண்காணிப்பு கேமராக்கள் இயக்கம் குறித்து கேட்டறிந்தார். மேலும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, மாநகராட்சி



ஆணையாளர் அர்பித் ஜெயின், வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஸ்மைல் பவுண்டேஷன் பெர்ஜர் பெயிண்ட்ஸ் இணைந்து
# பெயிண்டர்களுக்கு இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ் என்ற திட்டத்தைத்துவக்கினர்

கோவையில் ஸ்மைல் பவுண்டேஷன் மற்றும் பெர்ஜர் பெயிண்ட்ஸ் இணைந்து பெயிண்டர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொடுக்க இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் வகையில் 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' என்ற திட்டத்தைத் துவக்கினர். இதில் பெயிண்டிங் தொழில் மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள் மற்றும் நிறுவனத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

பெயிண்டர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொடுக்க இலவச திறன் மேம்பாட்டுத் திட்டத்தை கோவையில் ஸ்மைல் பவுண்டேஷன் மற்றும் பெர்ஜர் பெயிண்ட்ஸ் ஆகியவை இணைந்து 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' என்ற திட்டத்தைத் துவக்கி உள்ளனர்.

இத்திட்ட துவக்கவிழாவில் சிறப்பு விருந்தினர் பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அபிஜித் ராய் ரிப்பன் வெட்டி பயிற்சி வாகனத்தினை அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து ஸ்மைல் பவுண்டேஷனின் இணை நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான சாந்தனு மிஸ்ரா உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்தனர்.

இது தமிழ்நாட்டில் தொடங்கப்படும் இரண்டாவது திட்டமாகும். இந்த வாரத் தொடக்கத்தில், கர்நாடக மாநிலம் மைசூருவில் இதேபோன்ற ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அது கர்நாடகாவில் தொடங்கப்பட்ட இரண்டாவது திட்டமாகும்.

பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா லிமிடெட் மற்றும் ஸ்மைல் பவுண்டேஷன் ஆகியவை 2021ம் ஆண்டில் இந்த 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்தன. அமைப்புசாரா பெயிண்டர்களுக்கு அதாவது வீடுகளுக்கு பெயிண்ட் அடிப்பவர்களுக்கு நவீன வர்ணம் பூசும் தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொடுத்து, அவர்களின் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் அவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளும், வருமானமும் கிடைக்கும்.

இப்பயிற்சி மையங்கள் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கும் இடங்களாகவும் உள்ளன. பெண்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டு தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தியாவின் 26 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் உள்ள பெயிண்டர்களுக்கு இந்தத் திறன் பயிற்சியானது முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' திட்டத்தின் மூலம் இதுவரை நாடு முழுவதும் 3 லட்சத்து 15 ஆயிரம் பெயிண்டர்களுக்கு இலவசப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது 26 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில், 51 பின்தங்கிய மாவட்டங்கள் உட்பட மொத்தம் 503 மாவட்டங்களில் செயல்பாட்டில் உள்ளது.

ஒவ்வொரு 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' நடமாடும் வாகனத்திலும் ஆடியோ--வீடியோ கருவிகள், செயல்முறைப் பயிற்சிக் கூடங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் உள்ளன. வர்ணம் பூசுவதை எப்படி மிகவும் திறமையாகவும், விரைவாகவும், சுத்தமாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் செய்வது என்பதை இவை மூலம் விளக்க முடியும். ஒவ்வொரு திட்டத்திலும், தொழில் அறிவும் தொழில்நுட்பத் திறனும் கொண்ட அனுபவம்



வாய்ந்த, சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்கள் உள்ளனர்.

இதுகுறித்து பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அபிஜித் ராய் கூறுகையில், "சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள பெயிண்டர்களுக்கு இந்த பயிற்சியை அளிப்பதன் மூலம் அவர்களுக்கான சிறப்பான எதிர்காலத்திற்கு நாங்கள் வித்திடுகிறோம்.

அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் ஒரு சிறந்த வாழ்க்கையை உருவாக்க உதவுகிறோம். அவர்களின் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் நாங்களும் இருப்பதில் பெருமை கொள்கிறோம்," என்றார்.

ஸ்மைல் பவுண்டேஷனின் இணை நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான சாந்தனு மிஸ்ரா கூறுகையில், "நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் திறன் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் திறமையான தொழிலாளர்களுக்கான தேவை அதிகம் உள்ளது. இந்தியா முழுவதும் படிப்படியாக விரிவடைந்து வரும் இந்த தனித்துவமான சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் பெர்ஜர் பெயி ண்ட்ஸ் நிறுவனத்திற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்," என்றார்.

இந்தியா முழுவதும் சிறப்பாகச் செயல்பட்டதற்காக இந்த திட்டம், ஆண்டின் சிறந்த சமூகத் தொழில்முனைவோர் திட்டத்திற்கான விருதை சமீபத்தில் பெற்றது. சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களுக்காக, கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய வர்த்தக சபை, பெங்கால் வர்த்தக மற்றும் தொழில் சபை, இந்தியன் பிசினஸ் விருது, பாரத் சிஎஸ்ஆர் & சஸ்டெய்னபிலிட்டி விருது மற்றும் இம்பாக்ட்ரூட்ஸ் விருது ஆகியவற்றையும் இத்திட்டம் வென்றுள்ளது.

இத்திட்டம் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், பயனாளிகளுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் நம்பிக்கை அதிகரித்தது மட்டுமல்லாமல், அவர்களின் வாழ்க்கை முறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் பெர்ஜர் நிறுவனத்தின் புதிய 2 வகை பெயிண்ட்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் பெயிண்டிங் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் மற்றும் நிறுவனத்தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கு இணங்க ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் ... தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கம்பம் செல்வேந்திரன் (Ex.MP) கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் . இக்கூட்டத்தில் ராதாகிருஷ்ணன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ. செந்தில்குமார், சின்னையன், செல்ல பொன்னி, ஈரோடு மாநகராட்சியின் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள் குறிஞ்சி தண்டபானி, அக்னி சந்துரு, பொ.ராமசந்திரன், வி.சி.நடராஜன், குமாரவடிவேலு, லட்சுமன குமார், முருகேசன், மற்றும் வட்ட கழக செயலாளர்கள், கழக மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரையில் விவசாயிகள் சங்கம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் விவசாய சங்கம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது 33 ஏரி பாசனகால்வாயில் இருந்து மூங்கிலேரி பெரியஏரிக்கு பாசன கால்வாய்அமைக்ககோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் வஜ்ரவேல் தலைமையில் தலைவர் உமாபதி செயலாளர் வழக்கறிஞர் மூர்த்தி பொருளாளர் காளியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது மூங்கிலரி பெரியஏரி மற்றும் நொண்டி ஏரி புதுப்பட்டி நாகர்கோட்டை கீழ்குப்பம் பஞ்சாயத்து ஏறி இருக்கு பாரூர் பெரிய ஏரியில் கிழக்குப்புற பிரதான கால்வாயில் இருந்து போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை வட்டாரங்களில் உள்ள 33 இயருக்கு நீர் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்க கோரி மூங்கிலேரி ஊராட்சி மக்கள் கடந்த 14 10 2015 தேதியில் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கொடுத்து கடிதம் பேரில் செயற்பொறியாளர் பொதுப்பணித்து றை நீர் ஆதாரத்துறை திட்டங்கள் திட்டம் வடிவமைப்பு கோட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குழந்தை கவுண்டன் ஏரி மட்ட அளவு நீர் சுமார் 355 ஆயிரம் மீட்டரிலும் நீர் வழங்க கோரும் மூங்கிலேரி பெரிய ஏரியின் மட்ட அளவு சுமார் 348,000 மீட்டர் என்றும் ஆய்வு அறிக்கையை கடித எண் 79 இல் 4.4.2016 படி மூங்கிலேரி பெரிய ஏரி தாழ்வாக உள்ளதால் நீர் வழங்க சாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது மூங்கிலேரி பெரிய ஏரி நொண்டி ஏரி புதுப்பட்டி மற்றும் நாகன்குட்டை புளியம்பட்டி நீர் வழங்கமுதல்கட்ட ஆய்வு பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அரசாணை படி உரிய ஆய்வு மேற்கொண்டு மூங்கிலேரி பெரிய ஏரிக்கு தண்ணீர் வழங்கும் கால்வாய் அமைத்துக் கொடுக்க கோரி ஊத்தங்கரை நீர்வளத்துறை பாசன பிரிவு அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சோசலிசத் தந்தை ஆச்சார்யா நரேந்திர தேவாவின் 70வது நினைவு நாள்:

# ஈரோட்டில் காங்கிரஸ் மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் மலரஞ்சலி






இந்திய சோசலிச இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஆச்சார்யா நரேந்திர தேவாவின் 70-வது நினைவு நாள் இன்று ஈரோட்டில் உணர்வுப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது. நிகழ்வின் சிறப்பம்ச ங்கள்:

ஈரோடு பெருந்துறை சாலையில் உள்ள காலிங்கராயன் ஓய்வு விடுதி வளாகத்தில் அமைந்துள்ள ஆச்சார்யா நரேந்திர தேவா நினைவு இல்லத்தில் மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

தலைமை: ஈரோடு மாமன்ற உறுப்பினரும், முன்னாள் மாவட்டத் தலைவருமான ஈ.பி. ரவி தலைமை தாங்கினார்.

முன்னிலை: முன்னாள் இளைஞர் காங்கிரஸ்தலைவர் குணாதரன் (என்கிற சேவக்) மற்றும் முன்னாள் மாவட்டத் தலைவர் டி. திருச்செல்வம் ஆகியோர்முன்னிலைவகித்தனர்.

மரியாதை: ஈரோடு மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பி. ராஜேஷ் ராஜப்பா அவர்கள், ஆச்சார்யா நரேந்திர தேவாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மண்டலத் தலைவர்கள் மாமரத்துபாளையம் எஸ்.கோபி,ஆர்.விஜயபாஸ்கர், எச்.எம்.ஜாபர் சாதிக்; மாவட்டத் துணைத் தலைவர்கள் கே.புனிதன்,சி.பாஸ்கர்ராஜ்; மாவட்டப் பொதுச் செயலாளர்கள் வி.கே. சச்சிதானந்தம், இரா. கனகராஜன்; ஊடகப் பிரிவுத் தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைதுறைதுணைத்தலைவர் கே என் பாஷா நெசவாளர் மாவட்ட தலைவர் சி மாரிமுத்து மாவட்ட நிர்வாகி கள் பெரியார்நகர் சூரஜ்,சிந்தன்நகர்கிருஷ்ணமூர்த்தி வாட்டர் சிவாஜி, எம் ஆர் மாது உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சர்வ கட்சியை சேர்ந்த டி முருகானந்தம் மற்றும் நிர்வாகிகள் டாக்டர் சிவமுருகன், பாஸ்கர், பன்னீர்செல்வம், தங்கராஜ், குணசேகரன், ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதர அமைப்புகள்: தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநிலத் துணைத் தலைவர் குளம் ராஜேந்திரன், தமிழக பசுமை இயக்கம் கே. ரவிச்சந்திரன் மற்றும் ஐ.என்.டி.யூ.சி ஜெகநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

முக்கியத் தீர்மானம்: புதிய நூலகம் அமைகிறது!

அஞ்சலி செலுத்திய பிறகு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. "சோசலிசத் தந்தை ஆச்சார்யா நரேந்திர தேவாவின் நினைவைப் போற்றும் வகையில், இந்த நினைவு இல்லத்தின் அருகிலேயே விரைவில் ஒரு நவீன நூலகம் அமைப்பது" என ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நூலகம் வருங்கால சந்ததியினர் சோசலிசக் கொள்கைகளையும்,ஆச்சார்யாநரேந்திர தேவாவின் தியாக வாழ்வையும்அறிந்துகொள்ள ஒரு பாலமாக அமையும் என நிர்வாகிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்*.

*ஆச்சார்யா நரேந்திர தேவா: சோசலிசச் சுடரின் வரலாற்றுப் பயணம்*.!

தொடக்கமும் தூண்டுதலும் (1889 – 1899)

பிறப்பு: 1889 அக்டோபர் 30 அன்று உத்திரப்பிரதேச மாநிலம் சீதாபூரில் வழக்கறிஞர் பாபு பல்தேவ் பிரசாத்தின் மகனாகப் பிறந்தார்.விதை: தனது 10-வது வயதிலேயே (1899) லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் திலகரைக் கண்டு அரசியல் உணர்வு பெற்றார்.

2.வழக்கறிஞரிலிருந்து விடுதலைப் போராளியாக (1920 – 1934)

காந்திய வழி: வழக்கறிஞராக இருந்த அவர், 1920-ல் மகாத்மா காந்தியின் அழைப்பை ஏற்று தீவிர அரசியலில் குதித்தார். சோசலிசப் பிறப்பு: 1934-ல் ஜெயப்பிரகாஷ் நாராயணன், அருணா ஆசிப் அலி மற்றும் அசோக் மேத்தா போன்றோருடன் இணைந்து காங்கிரஸிற்குள் 'சோசலிஸ்ட் குழுவை' உருவாக்கினார். தியாகமும் விட்டுக்கொடுத்தலும் (1937 – 1939) முதலமைச்சர் பதவி துறப்பு: 1937-ல் உ.பி. மாநில முதலமைச்சர் பதவியை வல்லபாய் படேலுக்காக விட்டுக் கொடுத்து பெருந்தன்மை காட்டினார். நேதாஜிக்கு ஆதரவு: காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காந்தியின் வேட்பாளர் பட்டாபி சீதாராமை யாவை எதிர்த்துப் போட்டியிட்ட சுபாஷ் சந்திர போஸின் வெற்றிக்கு உறுதுணையாக நின்றார்.

சிறைவாசம்: 1939-ல் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு 2 ஆண்டுகள் சிறை சென்றார்.

போராட்டமும் கொள்கைப் பிடிப்பும் (1942 – 1948) வெள்ளையனே வெளியேறு: 1942 ஆகஸ்ட் புரட்சியின் போது உடல்நலம் குன்றியிருந்த போதிலும் போராட்டக்களத்தில் நின்றார். இதற்காக 3 ஆண்டுகள் சிறையிலடை க்கப்பட்டார். தனிப்பாதை: 1948-ல் கான்பூர் சோசலிஸ்ட் மாநாட்டில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தனது அரசியல் பயணத்தில் மாற்றங்களைச் சந்தித்தார். அறிஞராகவும் ஆய்வாளராகவும் (1952 – 1953)

கல்விப்பணி:நேருவின் வேண்டுகோளுக்கிணங்க காசி வித்யா பீடத்தின் தலைவராகப் பொறுப்பேற்று பல அரிய நூல்களை எழுதினார்.

சர்வதேசப் பார்வை: சீனாவின் வளர்ச்சி குறித்து நேரில் சென்று ஆய்வு செய்தார். நேரு அமைச்சரவையில் சேர வந்த அழைப்பைத் தனது கொள்கைக்காக மறுத்தார்.

* பெருந்துறையில் முடிவு:உடல்நலக்குறைவால் ஈரோடு மாவட்டம் பெருந்துறை சானிடோரியத்தில் சிகிச்சை பெற்று வந்த அவர், 1956 பிப்ரவரி 19 அன்று இதே பயணியர் விடுதி அறையில் காலமானார்.

"ஆச்சார்யா நரேந்திர தேவாகனவுகண்டசமத்துவ இந்தியாவை உருவாக்கப் பாடுபடுவோம்."



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் பா ராஜேஷ் ராஜப்பா 19.02.2026 ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கலை பிரிவின் தலைவர் எஸ் ஜாபர் அலி, துணைத் தலைவர் V.R. சிவக்குமார் ஆகியோர் பொன்னாடை போர்த்தி தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் டி திருச்செல்வம், மாவட்டத் துணைத் தலைவர் கே புனிதன், தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டிசிடியூ) மாநிலதுணைத்தலைவர் குளம் எம் ராஜேந்திரன், பொதுச்செயலாளர் வி கே சச்சிதானந்தம், செயலாளர் கதிர்வேல், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் சி மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என்.பாஷா,ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சேவா தளம் துணைத் தலைவர் ராஜாஜிபுரம் பி குமரேசன், வேன் ராமசாமி, நரிப்பள்ளம் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே கடமலைபுத்தூர் ஊராட்சியில் 225 கர்பிணிபெண்களுக்கு சமத்துவ வளைகாப்பு விழா

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே கடமலைப்புத்தூர் ஊராட்சியில்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் 225 கர்ப்பிணி பெண்களுக்கு சமத்துவ வளைகாப்பு விழா காஞ்சிபுரம் மாவட்டம் திமுக தெற்கு மாவட்ட கழக செயலாளர்

க.சுந்தர் எம்,எல்,ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 225 கர்பிணி பெண்களுக்கு திலகமிட்டு சந்தனம் நிலங்குவைத்து வளையல் அணிந்து சீர்வரிசையுடன் பரிசு பொருட்கள் வழங்கி மதியம் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது



இந்த நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே .கண்ணன் ,மத்திய ஒன்றிய செயலாளர் டி,வி, கோகுலகண்ணன் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி, தம்பு , ஆதிதிராவிட நலத்துறை மாவட்ட அமைப்பாளர் சிவகுமார், சமூக குழந்தைகள் நலத்துறை அரசு அதிகாரிகள் அச்சிறுப்பாக்கம் வட்டார மருத்துவர் சுரேஷ், மாவட்ட கவுன்சிலர் கோ,வசந்தா, ஒன்றிய கவுன்சிலர்கள் பொன்மலர்சிவக்குமார், பார்த்தசாரதி, இளைஞரணி தெற்கு ஒன்றிய அமைப்பாளர் பிரகாஷ், ரத்தினவேலு, தரு,லட்சுமணன், வெளியம்பாக்கம் சிவக்குமார்,மலைநகர் சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் சாவித்ரி சங்கர். முத்துக்குமார், வெண்ணிலா ஜோதி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அரசு செவிலியர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தவெக பிரச்சார வாகனத்தில் நடிகர் அஜித் படம் ஏன்? சி.டி.ஆர். நிர்மல்குமார் விளக்கம்



சென்னை: தவெக பிரச்சார வாகனத்தில் நடிகர் அஜித்குமாரின் புகைப்படம் இருப்பது குறித்து அக்கட்சியின் இணைப் பொதுச்செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னையை அடுத்த பல்லாவரத்தில் தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல்பிரச்சாரவாகனத்தை அக்கட்சியின் இணை பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல் குமார் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து அங்கிருந்த செய்தியாளர்களை சந்தித்துஅவர்பேசினார். அவர் கூறுகையில், "திமுக, அதிமுக போன்ற திராவிட கட்சிகள் பல்லாயிரம் கோடி ரூபாய் பண பலத்துடன் தேர்தலை சந்திக்க தயாராகி வருகின்றன. ஆனால், தவெக தலைவர் விஜய், பணபலத்தை நம்பாமல் மக்கள் பலத்தை மட்டுமே நம்பி களமிறங்கியுள்ளார்.

ஊழலற்ற நேர்மையான அரசு நிர்வாகத்தை தருவேன் என்ற வாக்குறுதியை எங்கள் தலைவர் விஜய் கொடுத்திருக்கிறார். அந்த வாக்குறுதியை ஏற்று, அனைத்துத் தரப்பு மக்களும் தாமாக முன் வந்து தவெகவுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

சுதந்திரப் போராட்டத்திற்குப் பின் காங்கிரஸ் பெற்ற வெற்றியைப் போல, 2026 தேர்தலில் மக்கள் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த போகிறார்கள். அது உறுதியாகிவிட்டது. ஒரு தொகுதிக்கு 25 கோடி ரூபாய் வரை செலவு செய்ய பிற கட்சிகள் தயாராக இருக்கும் சூழலில்,எளிய தொண்டர்களைக் கொண்டு நேர்மையான முறையில் மாற்றத்தை உருவாக்க நாங்கள் முயல்கிறோம். மற்ற கட்சிகளின் கூட்டங்களில் 'விசில்' அடிப்பதால் தலைவர்கள் எரிச்சல் அடைந்து வருவதை தினமும் பார்க்க முடிகறது.

தவெகவிற்கு மக்கள் கொடுக்கும் ஆதரவை கண்டு தான் அவர்களுக்கு இந்த எரிச்சல் வருகிறது. இது பயத்தின் வெளிப்பாடு.

இன்றைய சூழலில் 40 சதவீதம் வாக்கு வங்கி தவெகவுக்கு உள்ளது. இதுவே அவர்களின் அச்சத்திற்கு காரணம்" என நிர்மல் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, தவெக தேர்தல் பிரச்சார வாகனத்தில் நடிகர் அஜித்குமாரின் புகைப்படம் பயன்படுத்தப்படுவது குறித்து செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளித்த நிர்மல் குமார், "அது தனிப்பட்ட நிர்வாகி ஒருவரின் விருப்பம். அவர் தீவிர அஜித் ரசிகராக இருந்ததால், அவரது புகைப்படத்தை பயன்படுத்துவதற்கு மூன்று வாரங்களுக்கும் மேலாக அனுமதி கேட்டார். அதன் அடிப்படையிலேயே இதற்கு ஒப்புக் கொண்டோம்.

பொதுமக்களும், தொண்டர்களும், நிர்வாகிகளும் தங்களுக்குப் பிடித்தமான முறையில் தவெகவுக்கு பிரச்சாரம் செய்யலாம்" என்றார்.

கூட்டணி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "தேர்தல் நெருங்கும் இறுதி நாட்களில்பல மாற்றங்கள் நிகழலாம். தலைவர் சரியான நேரத்தில் கூட்டணி முடிவுகளை அறிவிப்பார். பிப்ரவரி 23-ம் தேதி வேலூரில் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல் துறையின் அனுமதி கிடைக்கும் இடத்தில் இந்தக் கூட்டம் சிறப்பாக நடைபெறும். தமிழகம் முழுவதும் தவெக அலை வீசி வருகிறது. தேர்தல் நாளன்று காலை 5 மணிக்கே மக்கள் வரிசையில் நின்று தவெகவுக்கு வாக்களித்து ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்துவார்கள்" என அவர் கூறினார்.

## தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்பட தடையில்லை; உச்சநீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி: தமிழ்நாடு வக்ஃப் வாரியம் செயல்பட சென்னை உயர் நீதிமன்றம் விதித்ததடையை



நீக்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு, தலைவர் உள்பட உறுப்பினர்களை நியமனம் செய்து, கடந்த ஆண்டு நவம்பர் 28-ம் தேதி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்தும் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வக்ஃபு மேலாண்மை சட்டத்தை முறையாக பின்பற்றாமல் வாரிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறி வழக்கறிஞர் சவுகத் அலி முகமது எனபவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடந்திருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் அடங்கிய அமர்வு முன் ஜனவரி 9-ந் தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சட்ட விதிகளின்படி, வக்ஃபு வாரியத்தில் மொத்தம் உள்ள உறுப்பினர்களில் இரண்டு பேர் முஸ்லிம் அல்லாதவர்களாக இருக்க வேண்டும், மாநில பார் கவுன்சிலில் இருந்து ஒரு உறுப்பினர் நியமிக்கப்பட வேண்டும் என்ற விதிகள் பின்பற்றப்படவில்லை என தெரிவித்தார். இந்த வாதத்தை கேட்ட நீதிபதிகள், உறுப்பினர்கள் நியமனத்தில் விதிகள் பின்பற்றப்படாததால் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்பட இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

# பங்குச்சந்தை: சென்செக்ஸ் 1,200 புள்ளிகள் சரிவு! ரூ. 8 லட்சம் கோடி இழப்பு!!

3 நாள்கள் உயர்வுக்குப் பிறகு பங்குச் சந்தை வர்த்தகம் (பிப்.19) கடும் சரிவுடன் நிறைவு பெற்றுள்ளன.

மும்பைபங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 83,969.82 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் சென்செக்ஸ் 300 புள்ளிகள் அளவில் சரிந்து வர்த்தகமானது.

எனினும் வர்த்தக நேர இறுதியில் மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 1,236.11 (1.48%) புள்ளிகள் சரிந்து 82,498.14 புள்ளிகளில் நிலை பெற்றது. அதிகபட்சமாக சென்செக்ஸ் 1,400 புள்ளிகள் வரை சரிந்தது. அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 365.00 (1.41%) புள்ளிகள் குறைந்து 25,454.35 புள்ளிகளில் நிறைவு பெற்றது. சென்செக்ஸ் குறியீட்டில் உள்ள 30 பங்குகளும் சரிவில் முடிவடைந்தன. இண்டிகோ,எம்&எம்,அன்ட்ராடெக் சிமெண்ட், டிரென்ட்,பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஆகிய நிறுவனங்களின் பங்குகள் 3.2 சதவீதம் வரை சரிந்தன.

நிஃப்டி மிட்கேப் 100, ஸ்மால்கேப் 100 குறியீடுகள் முறையே 1.59 சதவீதம், 1.27 சதவீதம் சரிந்து முடிந்தன.



துறைரீதியாக நிஃப்டி ரியல் எஸ்டேட், மீடியா, ஆட்டோ பங்குகள் தலா 2 சதவீதம் சரிந்து அதிக இழப்பை சந்தித்த துறைகளாக உள்ளன. தொடர்ந்து நிஃப்டி எஃப்எம்சிஜி, தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் அனைத்தும் 1 சதவீதத்திற்கும் மேலாக சரிந்தன. அனைத்துத் துறைகளும் சரிவுடன் முடிந்துள்ளன. இதனால் முதலீட்டாளர்களுக்கு மார் ரூ.8 லட்சம் கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

பங்குச்சந்தை சரிவு, ஏன்? வழக்கத்தைவிட அதிக வெளிநாட்டுப் பங்குகள் விற்பனை செய்யப்பட்டதால் பங்குச்சந்தைகள் கடும் சரிவைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. மேலும் கச்சாஎண்ணெய்விலை அதிகரிப்பு, அமெரிக்க - ஈரான் நாடுகளுக்கு இடையே உள்ள பதற்றம், இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி, அமெரிக்க பெடரல் வட்டி விகிதக் குறைப்பின் மீதான நிச்சயமற்ற தன்மை உள்ளிட்டவை காரணங்களாக கூறப்படுகிறது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ரூ. 10,956 கோடி மதிப்புள்ள ஐடி பங்குகளை விற்றுள்ளனர். ஐடி துறையில் செய்யறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் தாக்கத்தால் ஐடி பங்குகள் அதிகம் விற்பனையாகி கடுமையாகச் சரிந்துள்ளது. அமெரிக்க பங்குச்சந்தைகளும் (பிப். 18) சரிவுடன் முடிந்துள்ளன.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.